செய்தி வெளியீடு எண்:809 நாள்:28.10.2020

**செய்தி வெளியீடு**

**தேசிய அளவிலான முன்னிலையை தொடர்ந்திட விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்களுக்கு மாநில கொள்கை வளர்ச்சிக் குழு துணைத்தலைவர் திரு. சி. பொன்னையன், அறிவுறுத்தல்**

முன்னனேற விழையும் மவாட்டங்கள் என்ற திட்டம் செயல்படுத்தப்படும் இரு மாவட்டங்களான விருதநகர், இராமநாதபுரம் ஆகியவற்றின் திட்ட செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் துணைத்தலைவர் மாண்புமிகு மாநில கொள்கை வளர்ச்சிக் குழு துணைத்தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள் தலைமையில் இன்று 27.10.2020 நடைபெற்றது. காணொலி வாயிலாக நடைபெற்ற இக்கூட்டத்தில், இருமாவட்ட ஆட்சியர்களும் மாவட்ட அலுவலர்களும் கலந்து கொண்டனர். இராமநாதபுரம் விருதுநகர் மாவட்டங்களும் முறையே வேளாண்மை மற்றும் நீர்வள மேம்பாடு, அடிப்படை உட்கட்மைப்பு துறைகளில் முதற்பரிசாக ரூ.3 கோடி வென்றதற்கும், தற்போது சூலை 2020 மாதத்தில் விருதுநகர் மாவட்டம் நலவாழ்வு ஊட்டச்சத்துப் பிரிவில் அடைந்த முன்னேற்றத்திற்காக ரூ.3 கோடி வென்றதற்கும் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் துறை அலுவலர்களை பராட்டினார். இவ்விரு மாவட்டங்களும் பல்வேறு காரணிகளில் 100 விழுக்காடு முன்னேற்றம் அடைந்திருந்தாலும் மேலும் பல காரணிகளின்பால் சிறப்பு கவனம் செலுத்திட அறிவுறுத்தினார். குறிப்பாக, கோவிட் 19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள இச்சவாலான சூழ்நிலையை முன்னேற்ற நடிவடிக்கைக்கான நல்வாய்ப்பாக மாற்றிடும் வகையில் மாவட்ட பொருளாதாரத்தை சீராக்கத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலுயுறுத்தினார். முத்ரா கடன் திட்டம், இ–நாம் எனப்படும் இணையவழி வேளாண் சந்தை, நுண்ணீர் பாசனம், சான்றுபெற்ற விதைப்பயன்பாடு, முன்திறனுடையோரை கண்டறிந்து திறன் சான்று வழங்கல் ஆகியவற்றில் சீரிய முயற்சியுடன் கூடிய தனிகவனம் மேற்கொள்வதன் வாயிலாக மாவட்டங்கள் பெற்ற முன்னிலையை தக்க வைத்துக் கொள்ளுமாறும் வலியுறுத்தினார். தமிழக அரசின் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த அறிவுரை வழங்கினார்.

மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் உறுப்பினர் செயலர் ( முழு கூடுதல் பொறுப்பு) முனைவர் அதுல் ஆனந்த, இ. ஆ.ப. அவர்கள் இவ்வாய்வுக் கூட்டத்தினைஒருங்கிணைத்து நடத்தினார். இத்திட்டத்தின் கீழ் மாவட்டங்களின் முன்னேற்றம், குவிந்த கவனம் தேவைப்படும் துறைகளை சுட்டிக்காட்டி மாவட்ட செயற்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட செயலுத்திகளை கவனமுடன் பரிசீலித்து நடைமுறைப்படுத்துமாறு தெரிவித்தார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் மாநில கொள்கை வளர்ச்சிக் குழு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உறுப்பினர் செயலர்(முழு கூடுதல் பொறுப்பு)
மாநில வளர்ச்சி கொள்கைக் குழு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**